# மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பு திட்டப்பணியை உரிய காலத்தில் முடிக்க வேண்டும்

## தொழில்துறை அமைசர் எம்.சி.சம்பத்



சென்னை மெட்ரோ ரயில் திட்ட செயலாக்கத்தை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் நிர்வாக அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்த தொழில்துறை அமைச்சர் எம்.சி.சம்பத். உடன் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ் (நிதி), ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்), எல்.நரசிம் பிரசாத் (இயக்கம் மற்றும் அமைப்புகள்) உள்ளிட்டோர்.

சென்னை, ஜன.28: மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பு திட்டப்பணிகளை உரிய காலத்தில் முடித்து பயணிகள் சேவையைத் தொடங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என்று தமிழக தொழில் துறை அமைச்சர் எம்.சி.சம்பத் கேட்டுக்கொண்டார்.

சென்னை கோயம்பேட்டில் உள்ள மெட்ரோ ரயில் நிறுவனத்தின் நிர்வாக அலுவலகத்தில், சென்னை மெட்ரோ ரயில் திட்ட செயலாக்கத்தை தமிழக தொழில்துறை அமைச்சர் எம்.சி. சம்பத் செவ்வாய்க்கிழமை ஆய்வு செய்தார். அப்போது, சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் முதல் கட்டம், முதல் கட்டம் நீட்டிப்புப் பணிகள் மற்றும் இரண்டாம் கட்டத்துக்கான முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார்.

மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பு திட்டப்பணிகளை (வண்ணாரப்பேட்டை -திருவொற்றியூர் விம்கோ நகர் வரை நீட்டிப்புப் பணிகளை) உரிய காலத்துக்குள் முடித்து, பயணிகள் சேவையை தொடங்குவதற்கான ஏற்பாடுகளை செய்யக் கேட்டுக்கொண்டார். மேலும், மெட்ரோ ரயில் பயணிகளுக்காக செய்யப்பட்டுள்ள வசதிகள், இணைப்பு சேவை வசதிகள் குறித்தும் அமைச்சர் கேட்டறிந்தார்.

இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பங்கஜ்குமார் பன்சால், மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் சுஜாதா ஜெயராஜ்(நிதி), ராஜீவ் நாராயண் திவேதி(திட்டங்கள்), எல்.நரசிம் பிரசாத் (இயக்கம் மற்றும் அமைப்புகள்), தலைமைப் பொது மேலாளர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முதல் கட்ட நீட்டிப்பு திட்டம்: சென்னை மெட்ரோ ரயில் முதல் கட்ட நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை-திருவொற்றியூர் அடுத்த விம்கோ நகர் வரை 9.051 கிலோ மீட்டர் தொலைவுக்கு விரிவாக்கத் திட்டப்பணிகள் ரூ.3,770 கோடி செலவில் நடைபெறுகிறது.

இந்தப்பணிகளில் தற்போது வரை 80 சதவீத பணிகள் நிறைவடைந்துள்ளது. மீதமுள்ள பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. ஏப்ரலில் சோதனை ஓட்டம் நடத்தவும், ஜூனில் ரயிலை இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் கட்டத் திட்டம்: மாதவரம்-சிறுசேரி, மாதவரம்-சோழிங்கநல்லூர் உள்பட 3 வழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழித்தடத்தில் மொத்தம் 118.9 கி.மீ. தொலைவுக்கு ரூ.85 ஆயிரத்து 047 கோடி மதிப்பில் திட்டப் பணிகள் நடைபெறவுள்ளன. தற்போது பல்வேறு இடங்களில் மண் சோதனை தீவிரமாக நடைபெற்று வருகின்றன.